# "ஏசாயாவின் வருகையும், தேவனுக்காகப் போவதும்"

தீர்க்கதரிசிகள், ''பெரிய தீர்க்கதரிசிகள்'' என்றும் ''சிறிய தீர்க்கதரிசிகள்" என்றும் பிரிக்கப்பட்டிருக்கின்றனர். இந்தப் பெயர்கள் "பெரிய தீர்க்கதரிசிகள்", சிறிய தீர்க்கதரிசிகளைவிட உயர்ந்தவர்கள் என்ற அர்த்தமுடையதல்ல. இந்த வேறுபாடுகள் அவர்கள் எவ்வளவு எழுதியிருக்கிறார்கள் என்பதன் அடிப்படையிலானது. ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகம் எல்லாத் தீர்க்கதரிசனப் புத்தகங்களையும்விட நீண்டதாயிருப்பதால் ஏசாயா ஒரு பெரிய தீர்க்கதரிசி ஆவார்.

ஏசாயா யூதர்களின் உயர்ந்த குடும்பத்திலிருந்து வந்தவர். அவருடைய தகப்பன் வழியில் உசியா ராஜாவுக்கும், யோசியா ராஜாவுக்கும் நெருங்கிய உறவினர் என்று யூத பாரம்பரியம் தெரிவிக்கிறது. ஏசாயா அநேக ராஜாக்களுக்கு ஊழியம் செய்ததால், தேவன் அவரை அழைத்த ஊழியத்துக்கு இந்த ராஜ பிறப்புரிமை அவரை நன்றாக ஆயத்தப்படுத்தியிருந்தது.

## சில முக்கிய வரலாற்றுக் கண்ணோட்டங்கள்

இப்புத்தகம் வேதாகமத்தைத் தியானிப்பதையும் நடைமுறைப் படு த்துவதையும் மேற்பார்வையிடுவதாக இருந்தாலும், தீர்க்கதரிசிகளின் செய்திகளை தெரிந்துகொள்ளுவதற்கு சிறிது வரலாற்றுக் கண்ணோட்டமும் உங்களுக்கு அவசியம். தீர்க்கதரிசிகள் வாழ்ந்த இந்த வரலாற்றுக் காலத்தில், அவர்கள் பிரசங்கித்தனர், எழுதினர். இன்னும் தங்கள் ஊழியங்களை நடத்தினர். ஏறக்குறைய கி.மு. 800 முதல் கி.மு. 400 வரை மூன்று மாபெரும் உலக பேரரசுகள் இருந்தன: மிகப்பெரிய அசீரியப் பேரரசு, இஸ்ரவேலின் வடதிசை ராஜ்ஜியத்தைக் கைப்பற்றியது; அசீரிய பேரரசை தோல்வியடையச் செய்தபின் பாபிலோனியப் பேரரசு

இஸ்ரவேலின் தென்திசை ராஜ்ஜியத்தை முறியடித்து, மற்றும் பாபிலோனை வெற்றிகண்ட மீதியரையும் பெர்சியரையும் கூட வெற்றி கண்டது.

ஏசாயா வாழ்ந்த காலத்தில் அசீரியா உலகத்தில் சக்திவாய்ந்த நாடாயிருந்தது. ''இஸ்ரவேல்'' என்றழைக்கப்பட்ட பத்துக் கோத்திரத்தாரும் சிறை பிடிக்கப்பட்டனர், இதன் பின் இவர்களைப் பற்றி எந்த செய்தியுமில்லை. ஏசாயாவின் பிரசங்கத்தின் பெரும்பகுதி, வடதிசை ராஜ்ஜியத்தினரின் விக்கிரகாராதனையாகிய பாவத்திற்கு தேவனுடைய நியாயத்தீர்ப்பாக அசீரியரின் படையெடுப்பு வரப்போகிறது என்று அவர்களுக்கு எச்சரிக்கை அளிப்பதாயிருந்தது.அசீரியர்கள் வடதிசை ராஜ்ஜியத்தை சிறை பிடித்து பத்துக் கோத்திரத்தாரையும் நாடுகடத்தியபின் தெற்கே திரும்பி, தென்திசை ராஜ்ஜியத்தின்மேல் படையெடுத்தனர். அவர்கள் யூதாவின் சுவர்கள் கட்டப்பட்ட நகரங்களைக் கைப்பற்றினர். அசீரியப் படைகள் எருசலேம் நகரத்தின் வாசல்கள் வரை வந்து இரண்டு லட்சம் மக்களை அசீரியாவிற்கு சிறைபிடித்துக் கொண்டு சென்றார்கள். எனினும், அசீரியப்படை எருசலேமின் வாசல்கள் வரை வந்தவேளை, ஒரு தீர்க்கதரிசியாக ஏசா யாவுக்கு அது பிரகாசமான வேளையாயிருந்தது.

அந்த சமயத்தில் தென்திசை ராஜ்ஜியத்துக்கு எசேக்கியா ராஜாவாயிருந்தார். அவர் ஆவிக்குரிய தலைவரும், பெரிய ஜெப வீரருமாயிருந்தார். அவர் பத்து சங்கீதங்களை எழுதியவர். அசீரியர்கள் எருசலேமின் வாசல்களை அடைந்தபோது, அவர்களின் அதிபதி நகரகாவலர்களை இகழ்ந்து சத்தமிட்டு அவர்களைச் சரணமடையும்படி சவாலிட்டான்.

எசேக்கியா ராஜா தேவாலயத்தில் தம்முடைய மக்களின் உயிர்களுக்காக தேவனோடு மன்றாடிக்கொண்டிருந்தபோது, ஏசாயாவுக்கு ஒரு வெளிப்படுத்துதல் காணப்பட்டது. எனவே தீர்க்கதரிசி தேவாலயத்துக்குப்போய், எசேக்கியாவிடம் தேவன் அவருடைய ஜெபத்தைக் கேட்டதால் விடுதலை வரப்போகிறது என்று சொன்னார். அவர் ராஜாவிடம் அசீரியப்படைகள் தலைநகரில் தேவைப்படுவதால் அவர்கள் திரும்பிவரவேண்டும் என்ற செய்தி அவர்களுக்குக் கிடைக்கப்போகிறது என்றார். அசீரியா வந்து சேர்ந்ததும் அசீரியாவின் ராஜா கொல்லப்படுவான் என்று சொன்னார்.

அந்த இரவில், 185,000 அசீரியப் போர்வீரர்கள் தங்கள் பாளையங்களில் கர்த்தருடைய தூதனால் கொல்லப்பட்டனர். அவர்கள் அசீரியா வந்து சேர்ந்ததும் ஏசாயாவின் தீர்க்கதரிசனம் நிறைவேறியது. ராஜாவின் இரண்டு மகன்களும் அவனைக் கொலை செய்தனர்.

ஏசாயாவின் செல்வாக்கும் ஊழியமும் இல்லாவிட்டால், அசீரியர்கள் வடதிசை மற்றும் தென்திசை ராஜ்ஜியங்களை நிர்மூலமாக்கியிருப்பார்கள் என்று நீங்கள் சொல்ல முடியும்.

ஏசாயா பெர்சியா பாபிலோனை சிறைபிடித்து, தங்கள் தேவாலயங்களைத் திரும்பக் கட்டுவதற்கு சிறையிருப்பிலிருப்பவர்களுக்கு கோரேஸ் மன்னன், அனுமதியளிப்பான் என்று முன்னறிவித்தார். அவர் கோரேசின் பெயரை இரண்டு முறை குறிப்பிட்டு, எபிரெய வரலாற்றில் இந்தப் பெரிய நிகழ்வை முன்னறிவிக்கிறார். ஒரு தீர்க்கதரிசியின் முன்னறிவிக்கும் ஊழியத்தைப் பற்றிய வேதாகமத்தின் மிகப்பெரிய எடுத்துக்காட்டுகளில் ஒன்றை ஏசாயா நமக்குக் கொடுக்கிறார்.

வரலாறுகளில் யூத கோத்திரத்தலைவர்கள் ஏசாயாவின் இந்தத் தீர்க்கதரிசன உரையை கோரேஸ் மன்னனுக்குக் காண்பித்தனர் என்று பார்க்கிறோம். கோரேஸ் மன்னன் அப்போது ஒரு அசாதாரணக் கட்டளையைக் கொடுத்தார். அவர் திரும்ப வருவதற்கு அனுமதி கொடுத்ததோடு தேவாலயத்தைத் திரும்பக் கட்டுவதற்கான கட்டுமான பொருட்களையும் கொடுத்தார். இது ஏசாயா முன்னறிவித்தது போல அப்படியே நிறைவேறியது. பெர்சியர் பாபிலோனை கைப்பற்றியவுடன் முதலாவதாகக் கொடுத்து கட்டளை, சிறைப்பிடிக்கப்பட்ட யூதர்கள் தங்கள் நாட்டுக்குத் திரும்பலாம்; அங்கே தங்கள் தேவாலயத்தைத் திரும்பக் கட்டலாம் என்பதே (ஏசாயா 44:28–45:7; எஸ்றா 1:2–4).

## ஒரு சிறந்த பிரசங்கி

ஏசாயா ஒரு மிக அற்புதமான பிரசங்கியாய் இருந்திருக்க வேண்டும். இயேசு கிறிஸ்து கூறியபடி, பெண்களிடத்திலே பிறந்தவர்களில் பெரிய தீர்க்கதரிசி யோவான்ஸ்நானன் (லூக்கா 7:28). எனினும் யோவான் வனாந்தரத்தில் பிரசங்கித்தபொழுது, அவர் ஏசாயாவின் பிரசங்கங்களைப் பிரசங்கித்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது (லூக்கா 3:4). ‘‘ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் பெரிய தீர்க்கதரிசியாகிய யோவான்ஸ்நானன்’’ ஏசாயாவின் போதனைகளைப் பிரசங்கித்தது ஏசாயாவை, “தீர்க்கதரிசிகளின் தீர்க்கதரிசியாக” ஆக்குகிறது.

ஏசாயா ஐம்பது அல்லது அறுபது ஆண்டுகள் பிரசங்கித்திருக்கக் கூடும். அவர் யூதாவின் ஐந்து ராஜாக்களின் காலத்திலும், இஸ்ரவேலின் ஆறு ராஜாக்களின் காலத்திலும் வாழ்ந்தார். வட ராஜ்ஜியத்தின் மேல் அசீரியரிடமிருந்து வரப்போவதைப் பற்றி அவர் அதிகம் கூறினாலும், அவருடைய அடிப்படை ஊழியமும் அக்கறையும் தென்திசை ராஜ்ஜியமான யூதாவின்மேல் இருந்தது.